**இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை – 2016**

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களனிதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை அதிகாரச் சட்டத்தின் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயபூர்வமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) உப பிரிவுகளின் பிரகாரம் தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினாள் ஏற்படும் தாக்கத்தினை தவிர, நிதிக்கூற்றுக்களின் 2016 திசெம்பர் 31 இல் தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணகீட்டு நியமங்கள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணகீட்டு நியமம்- 07

நியமத்தின் 86(இ) பந்தியின் பிரகாரம் கட்டிடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்களின் பெறுமானத்தேய்வு கணிப்பீட்டுக்காக பயன்படுத்திய பெறுமானத்தேய்வு விகிதங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணகீட்டு நியமம்- 09

நியமத்தின் 9 ஆம் பந்திக்கு முரணாக ரூபா 3,481,290 கிரயமான பழுதடைந்த இருப்புகள் நிதிகூற்றுக்களில் இறுதி இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல் ஆகியவற்றை வெளிப்படுத்தி செயற்பாடுகளை இனங்கண்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் பின்வரும் குறைபாடுகள் நிலவியன.

(i) செயற்பாட்டு இலாபத்தினை கணிப்பிடுவதற்கான செம்மையாக்கலில் ஓய்வூதியப் பணிக்கொடைக்காக ஏற்பாடு ரூபா 371,989 வினால் குறைத்து காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 569,140 வான பணிக்கொடை கொடுப்பனவு காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டில் ரூபா 31,641 வான சேமிப்பு வட்டியை மீள முதலீடு செய்தல் முதலீட்டு செயற்பாடுகளினாலான காசுப்பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(iii) முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய கடன் பதிவழித்தல் ரூபா 80,610 காசுப்பாய்ச்சல் கூற்றில் இரு முறை குறிப்பிப்பட்டிருந்தது.

(ஆ) மீள்மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், தற்காலிக கட்டிடங்களின் பயனுள்ள ஆயட் காலம் 10 வருடம் என குறிப்பிடப்பட்டிருந்ததுடன் பெறுமானத்தேய்வு கணிப்பிடும் போது 19 வருடம் என கவனத்திற்கொண்டு பெறுமானத்தேய்வு இடப்பட்டதன் காரணமாக மீளாய்வான்டின் போது பெறுமானத்தேய்வு அளவு ரூபா 100,799 வினால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களிலுள்ள இறுதி இருப்பு ரூபா 1,938,769 வினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னால் அலுவலர் ஒருவரினால் 2011 ஆண்டின் போது கடன் அடிப்படையில் ரூபா 64,500 பெருமதியான சுவபோஷ மற்றும் மவ்போஷ பொதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் மீளாய்வாண்டின இறுதி வரையிலும் அவ்நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டு முதல் நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் செலுத்த வேண்டிய செலவினமாகக் கணக்குகளில் ரூபா 3,300,000 தொகை காட்டப்பட்டிருந்ததுடன் நெல் சந்தைப்படுத்தல் சபையின் கணக்குகளின் பிரகாரம், அந்த பெறவேண்டிய தொகை நிதிக்கூற்றுக்களில்லை.

(இ) 2011,2012 மற்றும் 2013 ஆண்டுகளிலிருந்து முன் கொண்டுவரப்படுகின்ற கடன்பட்டோர் மீதிகளில் கூட்டுத்தொகை ரூபா 878,842 ஆனதுடன் அத்தொகயை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2 வருடங்களிருந்து 5 வருடங்கள் வரையான மற்றும் 5 வருடங்களுக்கு மேலாக முன் கொண்டுவரப்படுகின்ற கடன்கொடுத்தோர் மீதிகள் முறையே ரூபா 390,560 மற்றும் ரூபா 199,757 ஆகும். அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையால் விவசாய்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து 2010 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை 3 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட ரூபா 5,500,000 கடனை 2016 ஆண்டின் போது செலுத்தி முடிக்கவேணடிய போதிலும் மீளாய்வான்டு இறுதிவரை ரூபா 4,900,000 தொகை செலுத்த வேண்டி இருந்தது.

**2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுக்கு இணங்காமை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (அ) நிதிப் பிரமாணம் 177(1) மற்றும் 371 | சேர்க்கப்படும் பணம் தினத்தோறும் வங்கியிலிடப்பட வேண்டிய போதிலும் தெஹிவளை விற்பனை நிலையம் மற்றும் நாரஹேன்பிடியலிலுள்ள பயிர் நாற்றங்காலில் சேர்க்கப்பட்ட பணம் 6 நாட்கள் முதல் 12 நாட்கள் வரை தாமதித்து வங்கியிலிடப்படும் சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டன. மேலும் தெஹிவளை விற்பனை நிலையத்திற்கு அனுமதிக்கப்பட்ட சில்லறைக்காசு கட்டு நிதி ரூபா 70,000 தொகையானதுடன் அத்தொகையை விஞ்சி ரூபா 131,092 முதல் ரூபா 271,946 வரையான தொகை கையிருப்பில் காணப்பட்டது. |
| (ஆ) நிதிப் பிரமாணம் இலக்கம் 751(1) | தெஹிவளை விற்பனை நிலையத்தால் பொருட் பதிவேடு மற்றும் இருப்பு புத்தகங்கள் என்பன பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் நிதி விளைவுகளில் ரூபா 2,343,342 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 13,925,060 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 11,581,718 தொகையான முன்னேற்றமொன்றைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போக்குவரத்து, தொலைதொடர்பு, பயன்பாட்டு மற்றும் ஏனைய சேவைகள் செலவினம் ரூபா 17,608,143 இனால் அதிகரித்த போதும் திறைசேரியிலிருந்தும் கமத்தொழில் அமைச்சிலிருந்தும் கிடைத்த ஒதுக்கம் ரூபா 22,391,535 இனால் அதிகரித்ததும் ஏனைய வருமானம் ரூபா 9,018,043 இனால் அதிகரித்ததும் மேற்குறிப்பிடப்பட்ட நிதிசார்விளைவின் முன்னேற்றத்தை பிரதானமாகப் பங்களித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த நான்கு ஆண்டுகளினதும் நிதிசார் விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது நிதிசார் விளைவில் 2014 ஆம் ஆண்டில் மிகையொன்றும் 2012, 2013, 2015, மற்றும் 2016 ஆண்டுகளில் பற்றாக்குறையொன்று நிலவியது. ஊழியர் சம்பளம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வைக் கவனத்தில் கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 17,768,473 தொகையான பங்களிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா 37,019,044 க்கு அதிகரித்திருந்தது.

## 3.2 சபைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட வழக்குகள்

பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றியும் சபைக்கு சட்டரீதியான உரித்தற்ற காணியொன்றுக்கு 2012 ஆம் ஆண்டின் போது வேலியொன்று நிர்மாணிப்பதற்காக உடண்பட்ட பெருமதிக்கு பாற்றமாகவும் கொள்வனவு நடைமுறைக்கி மாற்றமாகவும் ஒப்பந்தமொன்று கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரருக்கு பணம் செலுத்தப்படாமையினால் ரூபா 3,209,728 தொகையான இழப்பீடு கோரி அவரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மீளாய்வாண்டின் இறுதிவரை முடிவடையாது காணப்பட்டது.

## 3.3 ஏனைய அரச நிறுவனங்களின் வளங்களை பயன்படுத்தல்

கமத்தொழில் அமைச்சிற்கு சொந்தமான 03 மோட்டார் வாகனங்களும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சிக்கு உரிய 03 டக்கர் வண்டிகளும் மஹவலி அதிகார சபைக்கு உரிய ஒரு மோட்டார் வாகனமும், சிறு ஏற்றுமதி பயிர் மேம்பாட்டு சபைக்கு உரிய ஒரு மோட்டார் வாகனமும் சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்காமல் சபையால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1973 இன் 15 ஆம் இலக்க பட்டினி ஒழிப்பு இயக்க அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திற்காக அரசசார்பற்ற வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முகவராண்மையிலிருந்து உதவி பெறல், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் போது நிறுவனங்களுக்கும் ஏனைய சபைகளுக்கும் உதவுதல், கமநல மற்றும் கைத்தொழில் அபிவிருத்திக்கு தொடர்புபடுத்தப்பட்ட உத்தேச திட்டங்களுக்கு உதவி வழங்குதல், முன்னேற்றுதல் மற்றும் ஒழுங்கிணைத்தல், மற்றும் அமுல்ப்படுத்துதல் மூலம் அரச சார்பற்ற முகவராண்மைகளை ஊக்குவித்தல், சர்வதேச பட்டினி ஒழிப்பு இயக்கம் மற்றும் ஏனைய சமனான வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல் என்பன சபையின் நோக்கங்களாகும்.

(அ) மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக சபையினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம், ரூபா 617.91 மில்லியன் தொகையை செலவினவுகள் மூலம் 12 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு மதிப்பீடு செய்திருந்ததுடன் மீளாய்வாண்டில் அச் செயற்திட்டம் எதுவும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் 12 செயற்திட்டங்களிலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 274 மில்லியன் வருமானத்தை உழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் மீளாய்வாண்டின் போது உழைத்த வருமானம் ரூபா மில்லியன் 75 மாத்திரமேயாகும். அமுழ்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றம் பின்வருமாறு காணப்பட்டன.

(i) தனமல்வில பண்ணை

16 ஏக்கரை கொண்டுள்ள இப்பண்ணையினுள் எவ்வித பயிரிடலும் செய்யப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டில் குத்தகை வாடகை வருமானமாக ரூபா 128,000 உழைக்கப்பட்டிருந்ததுடன் மொத்த செலவு ரூபா 655,412 ஆகும்.

(ii) புத்தள இயற்கைப் பசளை செயற்திட்டம்

10 ஏக்கர்களை கொண்டுள்ள இக்காணியில் இயற்கை பசளை செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்படுவதன் மீளாய்வாண்டில் உற்பத்தி அளவு 87,650 கிலோகிராம் ஆகும். எவ்வாறாயினும் இவ்வுற்பத்திகளுக்காக எஸ்எல்எஸ் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) தெஹிவளை நுகர்வுப் பொருட்கள் விற்பனை நிலையம்

தெஹிவளை விற்பனை நிலையத்தின் இலாபம் முன்னைய ஆண்டைவிட 83 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. விற்பனை வருமானம் ரூபா 2,005,531 இனால் குறைவடைந்தமை மற்றும் ஆண்டின் போது மேற்தணச் செலவினம் ரூபா 424,755 இனால் அதிகரித்தமை இதறகுக் காரணமாகிருந்தது.

(iv) சுகாதார உணவு சிற்றுண்டிச்சாலை

- நச்சற்ற பாரம்பரிய சுவதேச உணவுகள் நுகர்வோர் முறையை ஏற்படுத்தும் நோக்கில் நாராஹேன்பிற்ற பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட சுகாதார உணவு சிற்றுண்டிச்சாலையில் அவ்வாறான உணவுகள் விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை. அங்கு வருமானம் மற்றும் செலவின நிலைமைகளை கவனிக்கும் போது 2012 ஆண்டில் ரூபா 406,765 வான நட்டம் படிப்படியாக அதிகரித்து 2015 ஆண்டில் ரூபா 4,192,533 வானதுடன் 2016 ஆண்டில் இது ரூபா 3,812,515 வாக காணப்பட்டன.

- இவ் உணவகத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பொருட்கள் மற்றும் தயார் செய்யப்பட்டிருந்த உணவுகளிற்கிடையே கணிசமான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே உள்ளன.

| பொருட்கள் | அளவு கிலோ கிராம் | தயார் செய்ய முடியுமான உணவுகள் (பொதிகள்) | தயார் செய்யப்பட்ட உணவுகள் (பொதிகள்) | விலகல்கள் (பொதிகள்) |
|---|---|---|---|---|
| அரிசி | 1,762 | 10,551 | 7,233 | 3,318 |
| மீன் | 210 | 5,215 | 1,945 | 3,270 |
| இறைச்சி | 188 | 2,774 | 1,046 | 1,728 |

(v) நாராஹேன்பிற்றிய நாற்றுமேடை

இந்த நாற்றுமேடை வருமானத்தின் அதிக விகிதம் வேறுபட்ட பயிர்வகை விற்பனை மூலம் பெறப்பட்டதுடன் 2016 ஆகஸ்ட் 08 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது 06 பயிர் வகைகளின் பௌதீக மீதிகள் மற்றும் இருப்புப் பதிவேட்டு மீதிகளுக்கிடையில் ரூபா 14,425 பெறுமதியான 102 பயிர்களின் பற்றாக்குறை காணப்பட்டது.

(vi) அரிசி மா மேம்பாட்டு செயற்திட்டம் - களங்குற்றிய

மீளாய்வாண்டின் போது இச் செயற்திட்டம் ரூபா 226,394 நட்டத்தை ஏற்படுத்தியிருந்ததுடன் மொத்த கிரயத்தின் 83 சதவீதம் சம்பளங்கள் மற்றும் படிகலிற்காக செலவிடப்பட்டிருந்தது.

**4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் அதிகாரச் சட்டத்திற்கான திருத்தங்களை முன்வைக்குமாறு 2012 ஒக்தோபர் 01 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற் குழுவினால் தீர்மானமொன்றை வழங்கியிருந்ததுடன் அத்தீர்மானம் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை..

(ஆ) 2012 ஆம் ஆண்டு நாராஹஹன்பிற்றிய விற்பனை நிலையத்தில் ரூபா 77,352 பணக் களவு தொடர்பாக குற்றப்பத்திரிகை நகல் மற்றும் ஆரம்ப விசாரணை அறிக்கை 2015 மே 05 இல் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2017 மே 25 ஆந் திகதி வரையாலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

(இ) மீளாய்வாண்டின் போது சுகாதார உணவு சிற்றுண்டிச்சாலையில் ஏற்பட்ட ரூபா 73,415 ஊழல் தொடர்பாக 2016 ஜுலை 28 இல் கமத்தொழில் அமைச்சின் விசாரணைக் குழுவொன்றினால் நடத்தப்பட்ட ஆரம்ப விசாரணையின் பிரகாரம், அத் தொகை உரிய ஊழியரிடமிருந்து அறவிட பரிந்துறைக்கப்பட்ட போதும் 2017 மே 25 வரையிலும் அத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

கொழும்பில் இடம்பெற்ற நச்சுவிசமற்ற தேசிய சந்தை கண்காட்சிக்காக பெயர்பலகை, தகவல் பலகை, இலட்சினை மற்றும் கண்காட்சி செலவாக ரூபா 486,110 சபையினால் செலவு செய்யப்பட்டிருந்தது. அக் கண்காட்சிக்காக பாவிக்கப்பட்ட பெயர் பலகை, தகவல் பலகை மற்றும் கண்காட்சிப் பலகை என்பன அம்பாறை மாவட்டத்தில் நடாத்தப்பட்ட இரண்டாம் கண்காட்சிக்காக பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பு இருந்த போதிலும் அதற்காக மீண்டும் ரூபா 550,000 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

**4.4 சர்ச்சைக்குரிய தன்மைலான கொடுக்கல் வாங்கல்கள்**

சபையின் நோக்கங்களிற்கு புறம்பாக பசளை மானிய பணம் வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக ''கமத்திற்கு சரியான பாதை'' எனும் மகுடத்தின் கீழ் 07 பத்திரிகை விளம்பரங்கள் மற்றும் தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பிற்கு ரூபா 1,878,318 வும் ''கிராம வாயில்'' நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான ஊடக பிரச்சார நடவடிக்கைகளுக்காக 8 பத்திரிகைகளில் விளம்பரங்கள் பிரசுரிப்பதற்காக ரூபா 2,543,200 தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

**4.5 பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெஹிவளை விற்பனை நிலையத்தில் வெதுப்பகமொன்றை நடாத்திச் செல்வதற்கு 2012 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 452,000 பெறுமதியான 2 இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் பண்டகசாலையில் விறைவற்றதாகக் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் 03 சேமிப்பு கணக்குகளில் நிலவிய ரூபா 806,008 தொகையை ஆக்கபூர்வ முதலீட்டு வழிகளில் முதலீடு செய்வது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 28 ஆக காணப்பட்ட போதும், 2014 நவம்பர் 12 திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 43 ஊழியர்களை ஆட்சேர்க்கப்படாமை காரணமாக உள்ளவாறான ஆளனி 71 ஆகவிருந்தது. எனினும் மேலதிக ஊழியர் எண்ணிக்கைக்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 7 வது பந்தியின் பிரகாரம் 2014 நவம்பர் 12 திகதிக்கு பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைணக்களத்தின் முன்கூட்டிய அங்கீகாரத்தின் பின்னரே தற்காலிக, அமைய, பதிற்கடமை அல்லது ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரனாக ஒப்பந்த மற்றும் நாட்சம்பளம் வழங்கும் அடிப்படையில் 4 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) பிரதி பணிப்பாளர் பதவி பதவியுயர்வு செய்யப்படும் தரமொன்றாக நியமிக்கப்பட வேண்டுமென முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அனுமதித்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது பிரதி பணிப்பாளர் (அபிவிருத்தி) ) வெளிவாரியாக ஆட்சேர்ப்பதற்காக ரூபா 43,412 தொகை செலவில் பத்திரிகை விளம்பரமொன்று பிரசுரித்து நேர்முகப் பரீட்சையும் நடத்தப்பட்டிருந்தது.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தையும் மற்றும் செலவினத்தையும், உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது 15 சதவீதம் தொடக்கம் 98 சதவீதம் வரையிலான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.2 கொள்வனவு திட்டம்

கொள்வனவு திட்டத்தில் உள்ளடங்கிய 5 விடயங்களுக்காக ரூபா 26,117,000 வான ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு செய்யப்படாதிருந்ததுடன் 3 விடயங்களுக்காக ரூபா 3,310,000 வான ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ரூபா 878,860 வான கொள்ளவனவு மட்டுமே செய்யப்படடிருந்தன.

# 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| | --------------------------------------- | ------------------------ |
| (அ) | நிதிக் கட்டுப்பாடு | பாதிடப்பட்ட செலவினங்களுக்கும் உள்ளபடியான செலவினங்களுக்குமிடையே விலகல்கள் அவதானிக்கப்பட்டமையும் கடன்களைத் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையும் |
| (ஆ) | சொத்துக்கள் நிர்வாகம் | வாகனங்கள் முறையாக சுவீகரிக்கப்படாமை. |
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக பதவியணியினர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தமை |
| (ஈ) | செயற்திட்ட முகாமைத்துவம் | செயல்நடவடிக்கைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாமை மற்றும் தொடர்ந்து செயற்திட்டதிலிருந்து நட்டம் அடைந்தமை |